| | | |
|---|---|---|
| ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | | |
| மூன்றாந் தவணைப் பரீட்சை – 2022 (2023)<br>**3rd Term Examination – 2022 (2023)** | 22 \| T \| I | |
| தமிழ் மொழியும் இலக்கியமும் I<br>Tamil Language & Literature I | தரம் 10<br>Grade 10 | நேரம் 1 மணித்தியாலம்<br>Time 1 Hours |

**கவனிக்குக,**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குமுரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.**

- **தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) “கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்…………” இங்கு **கிம்புரி** என்பது,
   1. யானை 2. தந்தம் 3. மலை 4. வாத்தியம்

2) “…….. விலங்கல் திண்தோள் கைவீரக்களிறு…..” இங்கு **விலங்கல்** என்பது,
   1. மலை 2. விலங்கு 3. யானை 4. வலிமை

3) “……. எட்டுணை யாயினும் இரவாது தான் ஈதல்…….” இங்கு **ஈதல்** என்பதன் எதிர்க்கருத்து,
   1. கொடை 2. ஏற்றல் 3. வேட்டல் 4. கொடுத்தல்

4) “ நாவலரின் காசநோய் அவர்களுக்கு அனுகூலமாய் அமைந்தது”. இங்கு **அனுகூலம்** என்பதன் எதிர்க்கருத்து.
   1. சாதகம் 2. வாய்ப்பு 3. பக்கபலம் 4. பிரதிகூலம்

5) “…….கோக்கள் வைகும் முற்றத்தான் முதல்தேவி” - இங்கு **முதல்தேவி**
   1. கைகேயி 2. வைதேவி 3. சுமித்திரை 4. கோசலை

- **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) “தியேட்டரில் கவுண்டர் ஓட்டைக்குள் கையை நீட்டினால் டிக்கட் கொடுப்பவர் கையைக் கெட்டியாக பிடித்துக்கொள்வார்” - இதில் கவுண்டர் என்பதற்கு நிகரான தமிழ்சொல்.
   1.காசாளர் 2. கணக்காளர் 3. பொருளாளர் 4. விற்பனையாளர்

7) பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு
   1. எழுத்து – நிறுத்தக்குறி 2. செய்யுள் - அடி
   3. கட்டுரை – பந்தி 4. சொல் - எழுத்து

8) சர்வதேச மன்னிப்புச்சபை , மனித உரிமைகள் கண்காணிப்பகம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், சர்வவோதயம் முதலானவற்றைக் குறிப்பதற்கு நடைமுறையில் பயன்படும் பொதுச்சொல்
   1. அரச நிறுவனங்கள்
   2. அரசசார்பற்ற நிறுவனங்கள்
   3. திணைக்களங்கள்
   4. சர்வதேச சபைகள்

9) பிரபந்தம் என்ற சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் சொல்,
   1. காவியம்
   2. பெருங்காப்பியம்
   3. சிற்றிலக்கியம்
   4. பேரிலக்கியம்

10) பிடி என்பது பெண் யானையைக் குறிப்பது போல பெண் குரங்கைக் குறிக்கும் சொல்
   1. கடுவன்
   2. பறழ்
   3. மந்தி
   4. பிணை

11) எப்படியும் வெளிநாடு செல்ல வேண்டும் என்று அவன் ஒற்றைக் காலில் நிற்கிறான் ஒற்றைக் காலில் நிற்றல் என்ற மரபுத்தொடரின் பொருள்.
   1. பலமற்றுநிற்றல்
   2. உறுதியற்று நிற்றல்
   3. ஆசைப்படுதல்
   4. பிடிவாதமாக நிற்றல்

12) "ஒருவனது அறிவு முதலியவற்றை ஆராய்தல்" எனும் பொருள் தரும் மரபுத்தொடர்.
   1. ஆளை அறிதல்
   2. ஆழம்பார்த்தல்
   3. ஆற்றுப்படுத்தல்
   4. அள்ளி இறைத்தல்

13) அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்பன
   1. சால்பு
   2. ஐந்திணை
   3. ஐம்பால்
   4. ஐம்பொறி

14) வெட்ட வெளி என்பது,
   1. இணைமொழி
   2. அடுக்குமொழி
   3. அடுக்கிடுக்கு மொழி
   4. மரபுத்தொடர்

15) 'தலைவிதியை மாற்ற முடியாது'. என்ற பொருள் தரும் பழமொழி
   1. அடாது செய்தவன் படாது படுவான்
   2. கனிந்த பழம் தானே விழும்
   3. அன்று எழுதியவன் அழித்து எழுதுவானா?
   4. அணை கடந்தவெள்ளம் அழுதாலும் வராது

16) 'நீண்ட ஆயுள் உடையவன்' என்ற கருத்தைத் தரும் சொல்.
   1. அமரன்
   2. சிரஞ்சீவி
   3. நைட்டிகன்
   4. தீர்க்கதரிசி

17) பின்வருவனவற்றுள் உவமைத்தொடர்
   1. வானவிளக்கு
   2. மலர்முகம்
   3. சிந்தனைச்சூழல்
   4. ஒளிவெள்ளம்

18) பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர் இடம்பெற்ற வாக்கியம்
   1. போ போ எனத் துரத்தினான்
   2. கோழிக்கூட்டினுள் சலசலப்புக் கேட்டது.
   3. சரசர என விழும் பால்
   4. குடுகுடு என நடக்கும் மனோதைரியம் அவவுக்கு

19) அரிச்சுவடியில் உள்ள எழுத்து முறைப்படி சொற்களை நிரற்படுத்தி, சொற்களின் பொருளைத் தரும் நூல்
   1. நிகண்டு
   2. கலைக்களஞ்சியம்
   3. சொற்றொகுதி
   4. அகராதி

20) கூறவந்த விடயத்தோடு தொடர்பில்லாத விடயங்களைக் கூறுதல்

1. குன்றக்கூறல்
2. மற்றொன்று விரித்தல்
3. கூறியதுகூறல்
4. மிகைப்படக் கூறல்

- **பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) ககரம் 'K' என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்

1. மகன்
2. கணவன்
3. தங்கை
4. தகப்பன்

22) கருவிப்பொருள் வேற்றுமை இடம்பெற்ற தொடர்

1. 'ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்துவரும்'
2. 'வெட்டும் பிடியைச் சிறக்கவே போட்டு'
3. 'அதன் பிறகு புள்ளுத் தொடர்ந்து வரும்'
4. 'வெள்ளித் தகட்டினால் விரல் கட்டம் இட்டு'

23) பின்வருவனவற்றுள் ஏவல்வினை,

1. செய்யுங்கள்
2. ஒழியட்டும்
3. வாழ்க
4. உதவுக

24) அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி,

1. அகம், ஆரவாரம், வீரம் ,முகம்
2. கலம், கண்ணீர், கவிஞன் , காலம்
3. ஆடல், பாடல், புவனம், வாகனம்
4. குருத்து, பருந்து, விருந்து , மருந்து

25) பின்வருவனவற்றுள் பெயரடை,

1. குறைவாக
2. இனிமையான
3. விரைந்து
4. விரைவில்

26) பின்வருவனவற்றுள் வேற்றுமைப் பொருளால் வேறுபடும் தொடர்

1. வான்மதி
2. உச்சித்திலகம்
3. மணிக்கோபுரம்
4. சுவர்க்கடிகாரம்

27) கெடுதல் விகாரம் இடம்பெற்றுப் புணர்ந்நது,

1. ஊர்ப்பெயர்
2. மரவேர்
3. நிலாமுற்றம்
4. மலரிதழ்

28) அவன் நீதியுணர்வு உள்ளவன்
அவன் தவறு செய்யமாட்டான்
மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் தர்க்கரீதியாக இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

1. ஆனால்
2. ஆகையால்
3. ஆயினும்
4. எனினும்

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29) (1) வேற்றுமைத் தொகை : மரச்சட்டம், மரவேர், கண்ணீர்
(2) வினைத்தொகை : ஆடுகதிரை, பாடுபொருள், காடுகரம்பை
(3) பண்புத்தொகை : முழுநிலவு , நீண்டபயணம், பழங்குடை
(4) உவமைத்தொகை : தேன்மொழி, மலர்முகம், நெருப்புப்பசி

30) (1) இயல்பு புணர்ச்சி : மதிமுகம், மலரிதழ், மடிமீது
(2) தோன்றல் விகாரப்புணர்ச்சி : பாட்டுப்பெட்டி, இரவுச் செய்திகள், புலிக்குட்டி
(3) திரிதல் விகாரப் புணரச்சி : மட்குடம், பழஞ்சோறு, கற்சிலை
(4) கெடுதல் விகாரப் புணர்ச்சி : மரவேர், கனவுலகம், இதழியல்

- **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

31) தொலைக்காட்சிகளில் இடம்பெறும் பெரும்பாலான கலை நிகழ்ச்சிகளுக்கு பெரும் வர்த்தக நிறுவனங்கள் …………………வழங்குகின்றன.
1.உதவித்தொகை 2. அனுசரணை 3. பணம் 4. விளம்பரம்

32) இரசாயன உரத் தட்டுப்பாட்டால் நட்டம் அடைந்த விவசாயிகள் ………………. கேட்டுப் போராடுகிறார்கள்.
1. மானியம் 2. நிவாரணம் 3. உதவி 4. தீர்வை

33) நூல் வெளியீட்டு விழாவில் இடம்பெற்ற ……………………. நூலின் குறைநிறைகளை காரண காரிய விளக்கங்களோடு எடுத்துரைப்பதாக மிகப்பொருத்தமான வகையில் அமைந்தது.
1. விமர்சனவுரை 2. நயப்புரை 3. கண்டனவுரை 4. அறிமுகவுரை

34) ‘‘பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்படவுள்ள, இந்த ஆண்டுக்கான ……………………. ஏழை மக்களுக்குச் சார்பானதாக அமையும்’’என்று நிதியமைச்சர் கூறினார்.
1. பிரேரணை 2. பாதீடு 3. முன்மொழிவு 4. அறிக்கை

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க**

35) உழைக்கும் கரங்கள் உன்னதமானவை என்ற உண்மை ……………………………
1. உணரப்படவேண்டியன
2. உணரத்தக்கவை
3. உணர்த்தக்கன
4. உணரப்படவேண்டியது

36) உயர்தரத்திற் பயில்வதற்கு எங்களிற் பெரும்பாலானவர்கள் கணிதத் துறையையும் சிலர் விஞ்ஞானத் துறையையும் நான் கலைத்துறையையும் …………………………..
1. தெரிவுசெய்தனர்
2. தெரிவு செய்தோம்
3. தெரிவு செய்தார்கள்
4. தெரிவு செய்தேன்

- **கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு 37 தொடக்கம் 39 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

தோட்டத்துக் குளிர்ந்த காற்றில்
தொடர்ந்து வந்திருந்த ஏற்றப்
பாட்டுத்தான் இது வரைக்கும்
கேட்டது ; பாடுவோரைக்
காட்டிற்றுக் கிழக்கு வானம்,
கையில் ஓர் விளக்கெடுத்து ;
நாட்டினுக்கு உணவு தேடும்
நாட்டத்தார் இறைக்கிறார்கள்

37) இப்பாடலில் விவரிக்கப்படுவது,
   1. விவசாயிகள் விடியற்பொழுதில் தோட்டத்துக்கு நீர் இறைப்பது.
   2. சூரியோதய வேளையில் தோட்டத்தில் தோன்றும் அழகு.
   3. தோட்டத்துக் குளிருக்குள் உழைக்கும் விவசாயிகள் படும் துன்பம்.
   4. இருட்டு வேளையில் நீர்ப்பாய்ச்சும் விவசாயிகளின் துயர வாழ்வில் ஏற்பட்ட விடிவு.

38) "தோட்டத்துக் குளிர்ந்த காற்றில் தொடர்ந்து வந்திருந்த ஏற்றப் பாட்டுத்தான் இது வரைக்கும் கேட்டது" என்று கூறுவதன் மூலம் உணர்த்தப்படுவது,
   1. வேறு எதையும் பொருட்படுத்தவிடாது அமைந்த ஏற்றப்பாட்டின் இனிமை
   2. உருவங்கள் புலப்படாத வகையில் அதுவரை இருள் கவிந்திருந்தமை
   3. உடலை வருந்தும் வகையில் தோட்டத்தில் குளிர்ந்த காற்று வீசியமை
   4. தோட்டத்தில் நீர் இறைக்கும் போது விவசாயிகளால் பாடப்படுவது ஏற்றப்பாட்டு.

39) இங்கு 'விளக்கு' என உருவகிக்கப்படுவது
   1. எழுந்துவரும் உதய சூரியன்
   2. வெளுத்துவரும் கிழக்கு வானம்
   3. நாட்டுக்காக உழைக்கும் விவசாயிகளின் உயர் பண்பு
   4. விவசாயிகளின் கடின முயற்சி

**40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

(அ) தமிழ்ச் சங்கமானது முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என முப்பிரிவாய் அமைந்திருந்தது.

(ஆ) இப்பாண்டிய மன்னர்கள் தமிழ்ச் சங்கம் அமைத்து தமிழை நன்கு வளர்த்தனர்.

(இ) எனினும் தமிழைப் பேணி வளர்த்த பெருமை பாண்டிய மன்னருக்கே உரியது.

(ஈ) கடைச்சங்கம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்ததென அறிஞர் கூறுகின்றனர்.

(உ) தமிழ்மொழி மூவேந்தராலும் வளர்க்கப்பட்டது.

1. உ, ஆ, அ, ஈ, இ
2. அ, ஈ, இ, ஆ, உ
3. ஆ, ஈ, உ, ஆ, இ
4. உ, இ, ஆ, அ, ஈ

( 40 x 1 = 40 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| | ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | |
| | மூன்றாந் தவணைப் பரீட்சை – 2022 (2023)<br>3rd Term Examination – 2022 (2023) | 22 \| T \| II |
| | தமிழ் மொழியும் இலக்கியமும் II தரம் 10<br>Tamil Language & Literature II Grade 10 | நேரம் 2 மணித்தியாலம்<br>Time 2 Hours |

- **கவனிக்குக:**
- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.**
- **இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

1. **சுருக்கமான விடை எழுதுக.**

i. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
"கழித்து நீங்கியதெனக் கள்ள வாசையை"

ii. "கண்ணான மச்சி வந்தென் காலுன்றக்கண்டேனே" –
இதன் எழுவாயைக் குறிப்பிடுக.

iii. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு எழுதுக.
நான் படித்து முடித்து விட்டேன் என்று சிறுவன் கூறினான்.

iv. பாரதியார் நவீன கவிதையின் முன்னோடி.
பாரதியார் பாஞ்சாலி சபதம் பாடினார்.
மேற்படி இரண்டு வாக்கியங்களையும் ஒரு வாக்கியமாக்கி எழுதுக.

v. அவன் என்னை நல்லவனாக எண்ணியிருந்தான். இந்த உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.

vi. "போடாமூதேசி! இதிலே நிண்டியோ ஏப்பைக் காம்பாலை வாங்கபோறாய் என்னட்டை".

அ) மேற்படி வாக்கியம் எந்த பிரதேச வழக்கு?
ஆ) "ஏப்பைக் காம்பு" என்பதன் திருத்தமான வடிவம் யாது?

vii. "இறை" என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக்காட்டுக.

viii. "முயலாமையால் தோற்றது" இது எவ்வகை அணி ?

ix. "என்மேலே சந்தேகமா? நேத்துப் பெரியவரே என்கிட்ட சொன்னாரு" என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.

x. மாதிரி நிகழ்ச்சி நிரலொன்றுக்கு ஏற்ற விதத்தில் பின்வரும் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி மீண்டும் எழுதுக.
வரவேற்புரை, நன்றியுரை, மங்கல விளக்கேற்றல், தலைமையுரை, பரிசில் வழங்கல், பிரதம விருந்தினர் உரை .

(10x2= 20 புள்ளிகள்)

2. **பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து , ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.**
**நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

i. எரிபொருள் மனித வாழ்விற்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. இன்று எரிபொருளின் விலையேற்றம் நாட்டு மக்கள் யாவரினதும் அன்றாட வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் முதல் சாதாரண உழைப்பாளிகள், அரச உத்தியோகத்தர்கள் வரை இந்த விலையேற்றம் ஒரு சவாலாகவே விளங்குகின்றது. இதனை விளக்கும் வகையில் **ஒரு விளக்கக்கட்டுரை.**

ii. ஒரு நாட்டின் அபிவிருத்தி அந்நாட்டிலுள்ள வளங்களில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. நமது நாட்டில் வளங்களுக்குக் குறைவில்லை. ஆனால் நாடு அபிவிருத்தி அடைந்து விடவில்லை. இனமுரண்பாடு நிலவுவதே நாட்டின் அபிவிருத்திக்குப் பெரிய தடையாக அமைகிறது. எனவே இனமுரண்பாடுகளைத் தீர்க்கப்பட வேண்டியது அவசியமானது என்பதை வலியுறுத்துவதாயும் அதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் விளக்குவதாயும் அமையும் வகையில் **ஒரு மேடைப்பேச்சு.**

iii. மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ள ஊடகங்களுள் தொலைக்காட்சி முக்கியமானதாகும். அதில் பல்வேறு அலைவரிசைகளினூடாகப் பல்வேறு விதமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. அந்நிகழ்ச்சிகளால் நன்மைகளே பெரிதும் ஏற்படுகின்றன எனக் கருதும் ஒருவருக்கும் தீமைகளே பெரிதும் ஏற்படுகின்றன எனக் கருதும் மற்றொருவருக்குமிடையிலான **ஓர் உரையாடல்.**

iv. சுந்தர் தன் வாழ்க்கையைப் பற்றி ஆயிரம் கனவுகளுடனே வாழ்ந்தான். அவற்றை நனவாக்கிட அல்லும் பகலும் அயராது பாடுபட்டான். அக் கனவுகள் மெய்ப்படும் தருணத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட வீதி விபத்தொன்று அவன் வாழ்க்கையைத் தலைகீழாக்கி விடுகிறது. பொறுப்பற்றுப் பயணித்த யாரோ ஒருவனாலேயே இது நிகழ்ந்தது. வாகனமோட்டுதலில் நிதானத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை மறைமுகமாக வலியுறுத்தும் **ஒரு சிறுகதை.**

(25 புள்ளிகள்)

3. **கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.**
**(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

பரந்து விரிந்த உலகம் சுருங்கி நின்று ஒரு குவலயக் கிராமம் ஆகக் காட்சியளிக்கிறது. ‘‘கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்கிறோம்’’. ஆனால் அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சியினால் இன்று உலகம் கையளவு தகட்டுக்குள் அடக்கப்பட்டுள்ளது. தகவல் தொழினுட்ப மற்றும் கணினிப் பொறித் தொழிநுட்பம் இவற்றின் சங்கமத்தால் உருவாகிய இணையம் இன்று தகவல் பரிமாற்றத்தில் ஒரு பெரும் புரட்சியையே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. கணினி மூலம் நமக்கு வேண்டிய தகவல்களை நாமே உலகம் முழுவதும் சென்று தேடி எடுத்துக் கொள்ள முடிகிறது. துலக்கத் துலக்கக் கேட்டதெல்லாம் கொண்டு வந்து தரும் அலாவுதீனின் அற்புத விளக்காக இன்றைய உலகில் இணையம் செயற்படுகிறது. இணையம் பற்றிக் குறிப்பிடும் போதே உலகளாவிய வலைப்பின்னல் என்ற தொடரும் சேர்ந்தே குறிப்பிடப்படுகின்றது. இணையத்தைச் சுற்றி வரும் முறையே வலை எனப்படுகிறது. வலை நோக்கல் (Browser) என்ற சிறப்பு ஆணைத்தொடர் மூலம் வலையில் உள்ள கடலளவு தகவல்களைப் பெற முடிகிறது. இணையம் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டது. என்றாலும் அண்மையில் தான் அதன் பயன்பாடு பெருகி மனித வாழ்வில் ஒரு பெரும் புரட்சியையே உருவாக்கியுள்ளது. தொடக்கத்தில் இணையம், அஞ்சல் செய்திகள் அனுப்புவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. நாளடைவில் இணையத்தின் பயன்பாடு சிறுகச் சிறுகப் பெருகி இன்று மின்னஞ்சல் , மின்வணிகம், மின்னிசை, மின்அரட்டை , மின் நூலகம் போன்ற பல வகைகளில் பயன்பட்டு வருகிறது. இணையத்தைப் பெரும்பாலும் பயன்படுத்துகிறவர்கள் யார்? எத்தகைய தகவல்களுக்காக இணையத்தை நாடுகின்றனர்? இணையத்தின் வாயிலாகப் பெறப்படும் பயன்கள் யாவை? என்பன குறித்து ஒர் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

(10 புள்ளிகள்)

4. **பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

மனிதன் ஆரம்பத்தில் பச்சை இறைச்சியைத் தின்று பல காலம் வாழ்ந்தான். பின்னர்,பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து விலங்குகளைப் பிடித்துப் பழக்கி, தனக்காக அவற்றை வேலை செய்யப் பழக்கினான். இதற்கும் பல காலத்திற்கு பின்னர்தான், குடும்பம் எனும் அமைப்பை ஏற்படுத்தி வாழத்தொடங்கினான். அன்பையும் அது காரணமாக விட்டுக்கொடுப்பதையும் இவ்வமைப்பு அவனுக்குப் பழக்கியது. இவ்வமைப்பில் அவனுக்குப் புதிய பல அனுபவங்கள் தோன்றின. ஒரு பெண்ணின் நன்மை தீமைகளில் பங்குகொள்ளத் தொடங்கியதும், இருவருக்கும் பிறந்த புதிய உயிர்களின் குறும்புகளில் ஈடுபடத் தொடங்கியதும், அவனுக்குப் புதியனவாக இருந்தன.

குடும்பங்கள் பல சேர்ந்து வாழத்தொடங்கிய போது சமுதாய வாழ்க்கை உருவானது. இவ் வாழ்வில் சில நன்மைகள் இருந்தன. சில அல்லல்களும் தோன்றின. சேர்ந்து வாழ்ந்தபோது பாதுகாப்பு இருந்தது. இல்லாதவரது போதாமையை மற்றொருவர் வழங்கி இட்டு நிரப்ப முடிந்தது. இவற்றால் ஏற்பட்ட மகிழ்ச்சியால் அவனது சமுதாய வாழ்வு தொடர்ந்தது .

எனினும் சமுதாய வாழ்வால் தனதும், தனது குடும்பத்தினதும் சுதந்திரம் பாதிக்கப்பட்டதை அல்லலாகக் கருதினான் இந்நிலையிலிருந்து விடுபட ஒரேயொரு வழிதான் இருந்தது. அதுதான் ஊர்முழுவதையும் ஒரு குடும்பமாகக் கருதி வாழும் முறை. இம் முறையில் ஓர் ஒப்பற்ற இன்பம் இருப்பதை உணர்ந்த அன்றுதான், மனிதன் தன்னை விலங்கிலிருந்து வேறுபடுத்தி வாழத்தொடங்கினான்.

i. குடும்ப அமைப்பின் மூலம் பழகிக் கொண்ட நற்பண்புகள் எவை?
ii. இவ்வமைப்பில் அவன் பெற்றுக்கொண்ட புதிய அனுபவங்களாக இங்கு கூறப்பட்டுள்ளவை எவை?
iii. சமுதாய வாழ்வின் நன்மைகள் யாவை?
iv. இச் சமுதாய வாழ்வினால் ஏற்பட்ட அல்லல்கள் எவை?
v. மனிதன் விலங்கு வாழ்க்கையிலிருந்து எப்போது வேறுபடத் தொடங்கினான்?

( 10புள்ளிகள்)

5. இன்று பாடசாலைகளில் மூலிகைத்தோட்டம் அமைத்தல் தொடர்பான செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது அதற்கமைவாக உமது பாடசாலையின் விஞ்ஞான மன்றத்தினாலே மூலிகைத் தோட்டம் ஒன்றை அமைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டள்ளது. விஞ்ஞான மன்றத்தின் செயலாளராகக் கடமையாற்றும் நீர், மூலிகைத் தோட்டம் அமைப்பதற்காக

- மூலிகைப் பயிர்களின் தேவைகள்
- அவை பற்றிய விளக்கங்கள், ஆலோசனைகள்
- பராமரிப்பு முறைகள்
- நேரடி உதவிகள்

என்பவற்றைக் கோரி, உமது பிரதேச ஆயுர்வேதத் திணைக்கள அதிகாரிக்கு 100 சொற்களில் அமையுமாறு **ஒரு கடிதம்** எழுதுக

அல்லது

இன்றைய மனித வாழ்க்கைக்கு மின்சாரம் மிகவும் இன்றியமையாதது மின்சாரத்தின் பயன்பாடு மிகவும் அதிகரித்துவிட்ட நிலையில், அதனைச் சிக்கனமாகப் பயன்படுத்தக் கோரி, பின்வரும் விடயங்களை உள்ளடக்கி, பொன்கர் நவோதய மக்கள் நலச் சங்கத்தின் சார்பில் 100 சொற்களில் அமையுமாறு ஒரு விழிப்புணர்வுத் **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

- மின்சாரத்தின் இன்றியமையாமை.
- மின்சார உற்பத்திக்கு ஏற்பட்டுள்ள சவால்.
- சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்.

(15புள்ளிகள்)

www.e-kalvi.com